# சேவாபாரதி தமிழ்நாடு

(பதிவு எண் 511/99)

# மாநில சேவா சங்கமம்

2013-14க்கான

ஆண்டறிக்கை விவரம்

2014 ஜூன் 21, 22 சனி, ஞாயிறு

பாரதீய பண்பாட்டு கல்வி மையம்,

திருவண்ணாமலை

சேவை பண்பாடு நல்லிணக்கம்

# சேவாபாரதி தமிழ்நாடு

## மாநில சேவா சங்கமம்

## 2014 ஜூன் 21, 22 சனி, ஞாயிறு

12. எம்.வி. நாயுடு தெரு,சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.
தொலைபேசி - 044- 2831 4075
email: sevabharathitn@rediffmail.com
website:www.sevabharathitn.org

# சேவாபாரதி தமிழ்நாடு

**பதிவு எண் 511/99**
12. எம்.வி. நாயுடு தெரு,சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.
தொலைபேசி - 044- 2831 4075
email: sevabharathitn@rediffmail.com website:www.sevabharathitn.org

## மாநில சேவா சங்கமம்

**பாரதீய அறநெறி பண்பாட்டு கல்வி மையம்,**
**சதானந்தா ஆஸ்ரமம், திருவண்ணாமலை**

**2014 ஜூன் 21, 22 சனி, ஞாயிறு**

அன்புடையீர் வணக்கம்,

நமது சேவா பாரதி தமிழ்நாடு அறக்கட்டளையின் பொதுக்குழு கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கும் அனைவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நமது அறக்கட்டளையின் சேவைப்பணிகளின் எண்ணிக்கை, தரம், ஆகியவை படிப்படியாக வளர்ந்து வருவது மகிழ்ச்சியான விஷயம்.

2013-2014 ஆண்டிற்கான ஆண்டறிக்கையை நமது மாநில தலைவர் திரு. துரை. சங்கர் அவர்கள் முன்னிலையில் வாசிக்கிறேன்.

மத்திய அலுவலகத்திற்கு வந்த தகவல்களைக்கொண்டு இந்த அறிக்கையை தொகுத்துள்ளோம். விடுபட்டுப்போன நிகழ்வுகள் பின்னால் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்து கொள்கிறேன்.

அன்புடன்
தேசியப் பணியில்
**இரா. இராஜேஷ் விவேகானந்தன்**
*மாநிலப் பொதுச்செயலாளர்*

# சேவாபாரதி ஆண்டறிக்கை 2013 – 2014

## ஜுலை 2013

## மாநில பொதுக்குழு கூட்டம் 2013

- ஜுன் 29 மற்றும் 30ல் குரோம்பேட்டை, SRDF விவேகானந்தா வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் சேவாபாரதி தமிழ்நாடு மாநில பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இரண்டு நாட்கள் நடைப்பெற்ற பொதுக்குழுவின் பல்வேறு அமர்வுகளில் வரக்கூடிய ஆண்டிற்கான திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப் பட்டது.
- திரு. Dr. வன்னியராஜன் அவர்கள் (ஷேத்ர சங்கசாலக் மற்றும் அறக்கட்டளை உறுப்பினர்), திரு. Dr.H.S. கோவிந்தா அவர்கள் (ஷேத்ர ப்ரச்சாரக் ப்ரமுக்), திரு.சூரியநாராயணராவ் அவர்கள் (RSS-ன் மூத்த பொறுப்பாளர்),திரு.பக்தவத்சலம் அவர்கள் ப்ராந்த ப்ரச்சாரக்,மற்றும் திரு.இராமராஜசேகர் அவர்கள் ப்ராந்த சேவாப்ரமுக் ஆகியோர் கலந்து கொண்டு வழிகாட்டினர்.
- சேவை செய்வது என்பது மனிதனின் இயற்கையான சுபாவம் ஆகும்.
- நாம் அற்புதமான வேலை செய்து கொண்டிருக்கிறோம்.
- இந்த வேலை செய்ய தாகம் இருக்க வேண்டும்.நம் மனதில் ஏற்பட்ட இந்த தாகம் மற்றும் சமுதாயத்தின் நிலை குறித்த வேதனை மற்றவர்கள் மனதில் ஏற்படுத்தி அவர்களை சேவை செய்ய வைத்தல் வேண்டும்.
- முறையாக வேலை செய்ய பயிற்சி அவசியம்.
- தனியாளாக செய்வதைவிட கூட்டாக, சிறப்பான பயிற்சிகள் பெற்று செய்யும் சேவை சமுதாயத்தில் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தும்.
- தீண்டாமை ஒரு சாபகேடு. நம் உடல் உறுப்புகள் அனைத்தும் எப்படி முக்கியத்துவம் வாய்ந்ததோ அப்படியே மனிதர்களும் சமமானவர்கள்.நாம் அனைவரும் பாரதமாதாவின் குழந்தைகள்.

- ❖ முக்கியமாக நாம் தீண்டாமை குடியிருக்கும் குடிசை பகுதிகளுக்கு சென்று அந்த மக்களிடம் அன்புடன் பேசி பழகி, அவர்களுக்கு தேவையான உதவிகளை கல்வி, மருத்துவம் போன்றவற்றில் தக்க ஆலோசனைகளை வழங்க வேண்டும்.
- ❖ சேவை செய்ய முன்வருபவர்கள் நேர்மையுடனும் உண்மையுடனும் பணியாற்றி மாற்றங்களை ஏற்படுத்த உறுதி பூண வேண்டும்.
- ❖ சேவை கார்யங்களின் தேவை கண்டறிந்து குழுவாக திட்டமிட்டு பணியாற்றுவது அவசியம்.
- ❖ கார்யகர்த்தர்கள் வேலை செய்கிறோம் என்றல்லாமல் சேவை செய்ய வாய்ப்பு கிடைத்ததற்கு மகிழும் தன்மையை கொண்டிருக்க வேண்டும்.
- ❖ நகர்தோறும் சேவாகுழுக்களை கட்டமைப்பது, அதிக எண்ணிக்கையில் 3 1/2 மணி நேர வர்காவை நடத்துவதன் மூலம் கார்யங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன் கார்யகர்த்தர்களை பயிற்றுவிப்பதும் திட்டமிடப்பட்டது.
- ❖ சேவா நிதியின் முக்கியத்துவமும் அதற்காக புரவலர்களை அணுகும் முறை குறித்தும் விவாதிக்கப்பட்டது.
- ❖ மாவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் நகர் பொறுப்பாளர்கள் என இரு குழுக்களாக பிரிக்கப்பட்டு பொறுப்பாளர்களின் பணிகள், முக்கியத்துவம் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.
- ❖ சேவை செய்து கொண்டே மற்றவர்களை சேவை செய்ய ஊக்குவிப்பவர்களே சிறந்த பொறுப்பாளர்கள்.
- ❖ புதிய நபர்களை சேவை செய்ய வைப்பது எப்படி?
  - கார்யகர்த்தர்கள் தங்கள் வார்த்தையை காப்பாற்றும் விதத்தில் பணியாற்றுவது.
  - குழுவிலுள்ளவர்களின் ஆர்வத்திற்கேற்ப பணிகளை ஒதுக்கீடு செய்வது.
  - பொறுப்பு தந்தவுடனே எதிர்பார்ப்பு அதிகமாக இருப்பதை தவிப்பது மற்றும் அவர்களுடன் நாமும் உறுதுணையாக நின்று பணி செய்வது.

- கடுமையாக உழைப்பவர் திறமையாக உழைப்பவர் என குழுவிலும் சிறப்பு கவனம் செலுத்தி வேலைகளை பிரித்து தருவது.
- மாவட்டத்தின் நகர், ஒன்றிய, பஸ்தி பகுதிகளை பற்றிய விவரம் மற்றும் வரைப்படத்தில் நமது கார்யங்கள் நடைபெறும் பகுதிகள் குறிக்கப்படுவதன் மூலம் விஸ்தரிப்பு யோசனைகளை வளர்ப்பது.
- கள ஆய்வு படிவம் மூலம் மக்கள் தொடர்பை அதிகரிப்பது.
- நேரத்தை திட்டமிட்டு பயன்படுத்தும் பாங்கை வளர்ப்பது.
- நமது கார்யங்களுக்கு தேவையற்ற விளம்பரங்கள் தருவதை தவிர்ப்பது.
- குடிசைபகுதி, கிராமங்கள் இவைகளில் தன்னார்வ தொண்டர்களை கண்டறிந்து பயிற்சி தந்து சேவையைத் துவக்குவதே நமது இயக்கத்தின் முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டும் என பொறுப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள்.
- நிறைவாக மாவட்டந்தோறும் ஆண்டு இலக்கு பற்றிய விவரங்கள் பதிவு செய்யப்பட்டன.

பொருள் பொதிந்த வாழ்க்கை என்பது பிறர்க்கு என்றும் உதவியாக இருப்பதே அதற்காக நம்மிடம் சந்தேகம், பொறாமை என்ற இரண்டுக்கும் இடம் தர கூடாது. மேலும் நமது இயக்கத்தின் மீதுஆழ்ந்த நம்பிக்கை , ஆழ்ந்த அன்பு,ஆழ்ந்த மதிப்பு கொண்டிருக்க வேண்டும் என சுவாமிஜியின் வழிகாட்டலுடன் மாநில பொதுக்குழு நிறைவு செய்யப்பட்டது.

❖ சென்னை மாவட்டத்திலுள்ள கல்வி தான மையங்கள் மற்றும் அன்பு இல்லங்களில் பயிலும் மாணவர்களுக்கு யூத் பார் சேவாவின் மூலம் 656 புத்தக பை கிட் வழங்கப்பட்டது.

## ஆகஸ்ட் 2013

### முப்பெரும் விழா



- ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதத்தில் சேவாபாரதி சுதந்திர தின விழா, ரக்ஷாபந்தன், பாரத மாதா பூஜை என்று முப்பெரும் விழாவை கொண்டாடி வருகின்றது.
- முப்பெரும் விழாவை தனது எல்லா சேவா மையங்களிலும் சிறப்பாக கொண்டாடியது.
- இந்த விழா நமக்கு நல்லொழுக்கத்தையும் சகோதரத்துவத்தை யும்,தேச பக்தியையும் ஊட்டிய தோடு நாம் அனைவரும் பாரத மாதாவின் குழந்தைகள் என்ற ஒற்றுமையுணர்வை தந்தது.
- 33 ஆகிய இடங்களில் நடைப்பெற்ற முப்பெரும் விழாக்களில் 1210 நபர்கள் கலந்து கொண்டு தேச ஒற்றுமைக்கு சேவை செய்ய உறுதிமொழி எடுத்தனர்.

## செப்டம்பர் 2013

- செப்டம்பர் 29ல் சென்னையில் நடைப்பெற்ற சேவாபாரதி மாநில செயற்குழு கூட்டத்தில் அனைத்து மாவட்ட பொறுப்பாளர்களும் கலந்து கொண்டு இயக்க அனுபவ பகிர்வுடன் ஆண்டு இலக்கை அடைய திட்டமிட்டார்கள்.
- நமது வேலை சேவா கார்யங்களை மேற்கொள்வதுடன் சமுதாயத்தில் மக்களின் மனோபாவத்தில் சிறப்பான மாற்றங்களை கொண்டு வருவதே அதிமுக்கியமானதாக அறிவுறுத்தப்பட்டது.
- சென்னை திருவான்மியூரில் உள்ள லட்சுமிபுரம் சேவா மையத்தில் 09.09.13 திங்கள் விநாயகர்சதுர்த்தி அன்று மாலை சேவாமைய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சேவாபாரதி தமிழ்நாடு மற்றும் விக்னேஷ் கல்வி அறக்கட்டளை இணைந்து கல்விதான மையங்களில் பயிலும்

51 ஏழை, எளிய மாணவர்களுக்கும், 10-ம் வகுப்பு பொது தேர்வில் 400-க்கு மேல் மதிப்பெண் பெற்ற பண்பாட்டு வகுப்பு மாணவ மாணவிகள் 5 பேருக்குமாக இந்த ஆண்டிற்கான கல்வி உதவித்தொகையாக மொத்தம் 1,62,000 ரூபாய் வழங்கப்பட்டது.

### அக்டோபர் 2013

## சகோதரி நிவேதிதையின் பிறந்தநாள் சமர்ப்பண தினம்.

❖ மகளிர் மத்தியில் அர்ப்பணிப்புணர்வும் தூய உள்ளத்துடன் சமர்ப்பணம் செய்யும்தன்மையும் உருவாக்க நிகழ்த்தப்படும் நிகழ்ச்சி.



சுவாமி விவேகானந்தரின் சிஷ்யை சகோதரி நிவேதிதையின் பிறந்தநாளை சமர்ப்பண தினமாக கொண்டாடிவருகிறோம். 2013 அக்டோபர் 28ம் தேதியில் திருவள்ளூர். சென்னை ஆகிய இடங்களில் நடைபெற்ற 12 சமர்ப்பண விழாக்களில் 240 தாய்மார்கள் கலந்து கொண்டு சமர்ப்பணம் செய்ததோடு, சேவை செய்யவும் உறுதிமொழி எடுத்தனர்.

❖ சென்னை வியாசர்பாடி அன்பு இல்லத்தில் பள்ளி மாணவர்களுக்கான இலவச சிறப்பு ஆங்கில பயிற்சி வகுப்பு அக்டோபர் மாதம் 4ஆம் தேதி தொடங்கப்பட்டது. ஆங்கில பயிற்சி வகுப்புகளில் 20 நபர்கள் கலந்து கொண்டனர்.

## ஹிந்து ஆன்மீக மற்றும் சேவை கண்காட்சி

❖ 27-10-2013 அன்று, கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்ற ஹிந்து ஆன்மீக மற்றும் சேவை கண்காட்சியில் கலந்து கொண்டு முகவரி அளித்த நபர்களுக்கு சேவாபாரதியுடன் ஒரு இணைப்பை ஏற்படுத்தும் நோக்கத்தோடு விருகம்பாக்கம் APR திருமண மண்டபத்தில்

ஒரு சந்திப்பு நடைபெற்றது.அதில் மொத்தம் 65 நபர்கள் கலந்து கொண்டனர்.

## நவம்பர் 2013

நவம்பர் 24ல் ஈரோடு கண்டிகாட்டு வலசையில் சேவா பாரதியின் மாநில செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட பொறுப்பாளர்கள் தங்கள் மாவட்டத்தில் நடைபெற்றுவரும் சேவா காரியங்களின் மூலம் பெற்ற குறிப்பிடத்தக்க அனுபவங்களையும் அவை சமுதாயத்தில் ஏற்படுத்திய மாற்றங்களையும் பகிர்ந்துகொண்டனர்.

சேவா குழுக்களை அமைத்து அதை செயல்படுத்துவது, 31/2 மணி நேர வர்காக்கள் நடத்துவது,சாதி வேறுபாடுகள் களையத்தக்கவகையில் குடிசைபகுதிகளில் நமது சேவை பணிகளை துவக்குவதில் கவனம் செலுத்துவது,சேவை செய்வதையும் இது எனதல்ல என்பதான இந்து தர்மப்படி கார்யகர்தர்கள் தங்கள் மனோபாவத்தை வளர்த்து கொள்வது என மேற்கொண்டு செயல்படும் வழிமுறைகள் முன்வைக்கப்பட்டன.

## டிசம்பர் 2013

### மூன்று நாள் முகாம்கள்



❖ சேவாபாரதி ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தில்3 நாள் மகளிர் சேவை பண்பு பயிற்சி முகாம்களை நடத்தி வருகின்றது. வட



சென்னை, மத்திய சென்னை, தென் சென்னை, திருவள்ளூர், ஓசூர், வேலூர், பாண்டிச்சேரி மற்றும் வந்தவாசி ஆகிய 8 இடங்களில் நடைபெற்ற 3 நாள் முகாம்களில் மொத்தம் 270

பெண்கள் பயிற்சிகாகவும், 80 மகளிர் பயிற்சியளிக்கவும் கலந்து கொண்டனர். பல்வேறு சேவை பயிற்சிகளை பெற்று அவரவர் பகுதிகளில் சேவைப் பணிகளை துவங்கியுள்ளனர்.

## ஜனவரி 2014

## பொங்கல் விழா

❖ சென்னை அஸ்தினாபுரத்தில் உள்ள கெங்கையம்மன் நகரில் பொங்கல் விழா விளையாட்டு போட்டிகளுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## பிப்ரவரி 2014

❖ மும்பையில் நடைபெற்ற பெருநிறுவனங்களின் சமூக பொறுப்பு நிதி (CSR) பற்றிய இரண்டு நாள் பயிற்சி வகுப்பிற்கு சேவாபாரதி சார்பாக இரண்டு நபர்கள் கலந்து கொண்டனர்.

❖ 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான நம்பிக்கை நட்சத்திரம் நிகழ்ச்சி வடதமிழகத்தில் 21 அரசு





பள்ளிகளில் நடைபெற்றது மொத்தம் 2931 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

❖ சென்னை திருவான்மியூரில் உள்ள லட்சுமிபுரம் பாரதி சேவா மையத்தின் 11வது ஆண்டு விழா பிப்ரவரி மாதம் 24ம் தேதி





நடைபெற்றது. சிறுவர், சிறுமியரின் கிருஷ்ணர், ராதை ஊர்வலத்துடன் தொடங்கிய விழாவில் அந்த பகுதியை சார்ந்த 2000க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

## மார்ச் 2014

- மார்ச் 10ம் தேதி அண்ணாமலை பல்கலை கழக தொலை தொடர்பு கல்வியில் முதுகலை சமூகப்பணி பயிலும் 100க்கும் அதிகமான மாணவ மாணாவியர் களப்பணிக்காக நமது சேவாபாரதி அலுவலகத்திற்கு வந்திருந்தனர். தேசபற்றை அடிப்படையாக கொண்டு சேவா கார்யங்களை செய்து வரும் நமது சேவாபாரதி அன்று அவர்கள் அனைவரது மனதிலும் இடம்பிடித்து விட்டதை அப்போதே அவர்களுக்குள் கலந்தாலோசித்து ஒரு கணிசமான தொகையை நன்கொடையாக அளித்ததிலிருந்து தெரிந்தது.




- சென்னை வைணவ கல்லூரி, முதுகலை சமூகப்பணித் துறையைச் சார்ந்த மாணவர்கள் களப்பணிக்காக நம்மிடையே சிறப்பு பயிற்சி பெறுவதற்காக வர துவங்கியுள்ளனர்.
- மார்ச் 8ம் தேதி சென்னை ஜி.கே.எம். காலனி சுவாமி விவேகானந்தர் இலவச கல்வி தான மையத்தின் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. சேவாபாரதி தமிழ்நாடு மாநில பொது செயலாளர் தலைமை வகித்தார். ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக சங்கத்தின் வடசென்னை ப்ரசாரக் திரு. தில்லை ஸ்ரீதர் அவர்கள் மாணவர்களை வாழ்த்தி



சிறப்புரையாற்றினார். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் அருமையாக நடந்தேறின.

❖ மார்ச் 23-ல் தாம்பரம் சானடோரியம் சேவா மையத்தில் இரத்த தான முகாம்,இலவச கண் சிகிச்சை முகாம் மற்றும் பொது மருத்துவ சோதனை முகாம் நடைபெற்றது. 146 பயனாளிகளில் 30 நபர்கள் இரத்த தானம் செய்தார்கள். 6





நபர்களுக்கு இலவச கண் புரை நோய்க்கான அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. சேவாபாரதியுடன் இணைந்து சங்கரா மருத்துவமனை பம்மல் மற்றும் ஹிந்து மிஷன் மருத்துவமனை தாம்பரம் மருத்துவ சேவை செய்தது குறிப்பிடத்தக்கது.

❖ சென்னை, தாம்பரம் சேவா மையத்தில் பிடி அரிசி திட்டத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட முதல் 10 கிலோ அரிசி அடையாரில் உள்ள புற்று நோயாளிகளுக்கான மாதா அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது.

## ஏப்ரல் 2014



❖ ஏப்ரல் 24 அன்று தாம்பரம் சானடோரியம் சேவா மையத்தில் யோகா வகுப்பானது தொடங்கப்பட்டு புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் நடைபெற்று வருகிறது. யோகா வகுப்பில் கலந்து கொள்பவர்

களுக்கு பகவத் கீதை மற்றும் திருக்குறள் கற்றுக் கொடுக்கப்படுகிறது.


- ❖ ஏப்ரல் 26 அன்று மகளிர் சேவை பண்பு பயிற்சி முகாமிற்கான சிக்?ஷிகா வர்க சென்னை கொரட்டூர் நல்லிகுப்புசாமி விவேகானந்தா வித்யாலயா பள்ளியில் நடைபெற்றது. 36 பேர் கலந்து கொண்டனர்.

## மே 2014

- ❖ சென்னை, திருவல்லிக்கேணியில் ஜடாபாய் பள்ளியில் 19 முதல் 25 வரை நடத்தப்பட்ட பள்ளி மாணவர்களுக்கான யோகா முகாமில் சிறப்பு பயிற்சி பெற்ற 26 பள்ளி மாணவர்களுக்கு மாநில தலைவர் திரு. துரைசங்கர் அவர்கள் சான்றிதழ் அளித்து வாழ்த்துரை வழங்கினார்கள்.
- ❖ மாநில மகளிர் சேவை பண்புப் பயிற்சி முகாம்

சேவாபாரதி தமிழ்நாடு சேவை பணியில் ஈடுபடும் மனப்பான்மையை பெண்கள் மத்தியில் வளர்க்கவும், அவர்களின் சேவைப் பணிக்கான திறனை வளர்க்கவும் வருடந்தோறும் மகளிர் சேவை பண்புப் பயிற்சி முகாம்களை நடத்தி வருகின்றது.

இந்த வருடம் தேர்தல் காரணமாக 10 நாள் முகாமானது 7 நாள் முகாமாக நடத்த முடிவு செய்யப்பட்டது. முகாமானது சென்னை கொரட்டூர் நல்லிகுப்புசாமி விவேகானந்தா வித்யாலயா பள்ளியில் கடந்த மே மாதம் 20 ஆம் தேதி முதல் 27 ஆம் தேதி வரை நடைபெற்றது.



முகாமில் சேவை ஏன்? எப்படி செய்வது, சேவை செய்யும்போது தேவையான மனப்பான்மை, சேவை பயிற்சிகள், தொழிற்பயிற்சிகள் மற்றும் யோகா ஆகியவை க்றறுக்கொடுக்கப்பட்டது. முகாமில் தாய்மார்கள், ஆசிரியர்கள், விரிவுரை

யாளர்கள், வேலை செய்வோர்கள், கல்லூரி மாணவிகள் மற்றும் பள்ளி மாணவிகள் உட்பட 83 மகளிர் முகாமில் கலந்து கொண்டனர். இவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக முந்தைய ஆண்டுகளில் பயிற்சி பெற்றும்,ஏற்கனவே முகாம்கள் நடத்தி அனுபவம் பெற்ற 37 பெண்கள் கலந்து கொண்டனர்.

இந்த முகாமில் கீழ்க்கண்ட சேவை பயிற்சிகள் கொடுக்கப்பட்டன.

- ❖ தீபபூஜை
- ❖ பண்பாட்டு வகுப்பு
- ❖ நடமாடும் நூலகம்
- ❖ சிறார்குழு
- ❖ பஜனை மண்டலி
- ❖ இலவச முதலுதவி மையம் (ஹோமியோபதி)
- ❖ பிரார்த்தனைகள்
- ❖ லிங்கபூஜை
- ❖ உழாவரப்பணி
- ❖ கல்விதானமையம்



மேற்படி சேவைபயிற்சிகளில் ஏதேனும் ஒன்றில் தங்களது திறமையை அதிகரித்துக் கொள்ள ஏற்பாடு செய்யபட்டிருந்தது.

நமது நாட்டின் பெருமையை அறிய, பண்பாடு,கலாச்சாரம் இவற்றின் மேன்மை அறிந்து அவற்றினை பின்பற்ற வேண்டியவற்றின் அவசியம்,சேவை செய்வதற்கு பயிற்சி பெறுவதும் கொடுப்பதும் அவசியம்,இன்றைய சமுதாயத்தில் நிலவக் கூடிய பிரச்சனைகள் அவற்றின் தீர்வுகள்,பெரியவர்களின் வாழ்க்கையிலிருந்து நாம் புரிந்துக் கொள்ள வேண்டிய விஷயங்கள் சமுதாய முன்னேற்றத்தில் பெண்களின் பங்கு மற்றும் பெண்கள் சேவை செய்ய வேண்டியதன் அவசியம் ஆகியவற்றை உணர்த்தும்படியாக கற்றறிந்த பெரியவர்கள் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினர்.

குழுவாக வேலை செய்தல், எவையெல்லாம் சேவைகள், அவற்றை எப்படி தொடங்குவது அதற்கு தேவையான தயாரிப்பு மற்றும் மனப்பான்மை போன்ற தலைப்புகளில் பயிற்சி பெற வந்தவர்கள் கலந்துரையாடினர்.

பொருளாதார ரீதியில் பின்தங்கியிருப்போரை முன்னேற்றும் விதமாக சேவைப்பயிற்சியின் ஒரு பகுதியாக பயிற்சி முகாமில் கலந்துக் கொண்டோருக்கு கீழ்க்கண்ட சிறு தொழிற்பயிற்சிகள் அளிக்கப்பட்டன.



- சாம்பிராணி
- பினாயில்
- சோப்பாயில்
- தோரணம்
- அணிகலன்

இவ்வாறு பெற்ற பயிற்சியினை தம் பகுதியில் பொருளாதார ரீதியாக பின்தங்கியோருக்கு தேவையான தொழிற்பயிற்சிகள் அளித்து அவர்கள் வாழ்வில் உயர வழிச்செய்வோம் என உறுதி யளித்தது குறிப்பிடதக்கது.

சேவைபயிற்சியின் ஒரு பகுதியாக சுமங்கலி பூஜைக்காக பயிற்சி அளிக்கப்பட்டது.அந்த சுமங்கலி பூஜையில் முகாம் நடந்த சுற்று வட்டார பகுதியிலிருந்து தாய்மார்கள் அழைக்கப்பட்டர். பள்ளியின் முதல்வர், துணை முதல்வர் உட்பட 114 நபர்கள் கலந்து கொண்டனர்.சுமங்கலி பூஜையானது பாதபூஜையுடன் தொடங் கியது. அனைவரும் தங்களை அர்ப்பணித்து உணர்வுபூர்வமாக பூஜையை செய்தனர். அனைவரும் பூஜையில் அர்ச்சனை செய்த குங்குமத்தை பரிமாறிக் கொண்டனர். கன்னிப் பெண்கள் அனை வரும் சுமங்கலிகளிடம் ஆசிர்வாதம் பெற்றது சிறப்பாக இருந்தது.



முகாமில் பயிற்சி பெற வந்தவர்கள் தங்கள் பகுதிகளில் சென்று சேவைகாரியங்களை தொடங்க பயிற்சி பெறும் விதமாக கிராம தொடர்பு ஏற்பாடு செய்யப்பட்டது. வாகனம் மூலமாகவோ, நடை பயணமாகவோ 8 குழுக்களாக பிரிந்து கிராமங்களுக்குச் சென்றனர். அங்கு ஒரு கோவிலை மையமாக வைத்து ஒவ்வொரு வீடாக தொடர்பு கொண்டு

நம் சேவாபாரதி செய்யும் பணிகளை எடுத்துக் கூறி மையமாக முடிவு செய்த கோயிலுக்கு அவர்களை அழைத்தனர். அதன்படி 8 கோயில்களிலும் சிறுவர்களுக்கு பண்பாட்டு வகுப்பும், 7 இடங்களில் தீபபூஜையும்,1 கோயிலில் சத்சங்கமும் நடைபெற்றது. ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு கிராமங்களில் 100 வீடுகளை தொடர்பு கொண்டனர்.



திரௌபதி அம்மன் கோயிலில் தீபபூஜையில் கலந்து கொண்ட தாய்மார்களிடம் பயிற்சி பெற வந்தவர்கள் நாங்கள் உங்கள் வீடுகளில் உணவு அருந்தலாமா என்று கேட்டு உணவருந்தி வந்தனர்.

மேற்படி ஊர்களால் இந்த சேவைகளை தொடர்ந்து நடத்த கேட்டுக் கொண்டது சிறப்பாக இருந்தது.

பயிற்சிபெற்றோர் நிறைவு நாள் மாலை யோகா, விளையாட்டு, ப்ரமீடு, கோலாட்டம் பயிற்சிகளை செய்துகாட்டினர்.பயிற்சி செய்து காண்பித்த நிகழ்ச்சிக்கு திரு.சாய்சுந்தர் அவர்கள் மகளிர்க்கு தொழிற்முறையில் கொடுக்ககூடிய பயிற்சிகளை மிகவும் சாதாரண பெண்மணிகள் சிறந்த நிபுணர்களால் கொடுக்கக்கூடிய பயிர்ச்சிகளை அதிக அளவு திறனுடனும் ஆழ்ந்த அன்புடனும் கொடுப்பதை கண்டு வியந்ததாக குறிபிட்டார். சேவைக்கு ஏற்றவர்கள் மகளிர்தான் உங்களின் மூலமாக சிறந்த சமுதாயம் உருவாகும் என நம்பிக்கையுடன் கூறினார். அந்நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய திரு.H.S.கோவிந்தா (RSS-ன் க்ஷேத்திர ப்ரச்சார ப்ரமுக்) அவர்கள் சேவை செய்பவர்கள் தாயுள்ளத்துடன் சேவை செய்ய வேண்டும் என்றும்,சேவை செய்பவருக்கு தேவையான குணாதிசயங்களை பற்றி குறிப்பிட்டும் பேசினார்.

நிறைவு நிகழ்ச்சியில் அனைவரும் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

வீடே உலகம் என்று இருந்த எங்களுக்கு சமுதாயத்தில் ஆற்ற வேண்டிய பணி அதிகம் உள்ளது என்பதை உணர்த்தி காட்டுவதாக இந்த முகாம் இருந்தது.

பல்வேறு மன கஷ்டங்களோடு வந்த எங்களுக்கு அவற்றை நீக்கி தொண்டின் மூலம் பேரானந்தம் அடையலாம் என்று உணர்ந்துள்ளோம் என குறிப்பிட்டனர்.

முகாமில் வலியுறுத்திய விஷயமான ஒரு சேவாகாரியத்தினை தேர்ந்தெடுத்து அதனை இந்த வருடம் முழுக்க தொடர்ந்து செய்வோம் என முகாமில் கலந்து கொண்ட அனைவரும் உறுதிமொழி எடுத்தனர்.

## ஜூன் 2014

- வந்தவாசி கொடியாலத்தில் குருபெயர்ச்சியை முன்னிட்டு 120 தீப பூஜை நடத்தப்பட்டது.சேவாபாரதி பொறுப்பாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் 500க்கும் மேற்ப்பட்ட கிராம மக்கள் கலந்து கொண்டனர்.
- ஆசிரியர் பயிற்சி




சென்னையில் கல்வி தான மையங்களை நடத்தி வரும் ஆசிரியர் களுக்கான பயிற்சி மாதம் தோறும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.



- ஜூன் 8 அன்று

சென்னை நுங்கம் பாக்கம், புஷ்பா நகரில், 06.06.2014 அன்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப் பட்டோர்க்கு, சேவா பாரதி சார்பாக நிவாரண உதவி வழங்கப் பட்டது.



அளவற்ற ஆற்றல், பெரும் ஊக்கம்,
அளவுகடந்த அஞ்சாமை, அளவில்லாத பொறுமை
இவையே நமக்குத் தேவை.

– சுவாமி விவேகானந்தர்

12. எம்.வி. நாயுடு தெரு,சேத்துப்பட்டு,
சென்னை – 600 031.
தொலைபேசி – 044– 2831 4075
email : sevabharathitn@rediffmail.com
website : www.sevabharathitn.org